## 65. என்ன தியாகம் என் கல்வாரி

**பல்லவி**

என்ன தியாகம் என் கல்வாரி நாதா
எனக்காக சிலுவையிலே - 2

**சரணங்கள்**

1. மறக்க முடியுமோ நீர்பட்ட பாடுகளை
வாரினால் முதுகில் அடிக்கப்பட்டீர்
கன்னத்திலே அறைய பட்டீர்
- என்ன தியாகம்

2. மறக்க முடியுமோ நீர்பட்ட வேதனைகள்
கைகளில் ஆணிகள் ஏற்றீர் ஐயா
கால்களில் ஆணிகள் ஏற்றீர் ஐயா
- என்ன தியாகம்

3. மறக்க முடியுமோ நீர்பட்ட உபத்திரவம்
தலையிலே முள்முடி சூட்டினரே
விலாவில் ஈட்டியால் குத்தினரே
- என்ன தியாகம்

4. மறக்க முடியுமோ நீர்பட்ட அவமானங்கள்
இழிவான வார்த்தையை பேசினரே
கன்னத்தில் எச்சயை துப்பினரே
- என்ன தியாகம்